

# ரூ100,000 பெறுமதியான பறவை

ஒரு மனிதன் வீதியிலே நின்று ஒரு பறவையுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அது ஒரு கொடூரக் காட்சி, நியாயமற்றதோர் விளையாட்டு. அம்மனிதன் அப்பறவையின் இறகுகளைப் பிடுங்கிக்கொண்டிருந்தான். அப்பறவையின் கூச்சல் அம்மனிதனின் செவிகளை எட்டவில்லை. கையில் அகப்பட்ட பறவையின் பாடும் தவிப்பும் அம்மனிதனுக்கு இன்பத்தைத் தருவதாய்த் தோன்றியது.

“ ஏய், நீ என்ன காரியம் செய்துகொண்டிருக்கிறாய்? ” என்று ஒரு பெரியவர் கேட்டார்.

“ ஏன் உமக்குத் தெரியவில்லையா? நான் இப்பறவையின் இறகுகளைப் பிடுங்குகிறேன். அது அதற்கு வேதனையாக இருக்கிறது. அந்த வேதனைக் கூச்சல் எனக்கு இதமாக இருக்கிறது. செட்டைகளைப்பிடுங்கிய பின்னர், என் வீட்டிலுள்ள பூனைக்கு உண்ணக்கொடுப்பேன். என்ன ருசியான உணவு... ” என்று கூறி அம்மனிதன் தெருவில் நடனமாடினான்.

“ பறவைகள் பறப்பதற்காக படைக்கப்பட்டவை, மனிதனே அதை விட்டுவிடு “ என்று அமைதியாக அந்த பெரியவர் கூறினார்.

“ எங்கே, அதை மறுபடியும் சொல்லும் பார்ப்போம்... பறவைகள் வானத்தில் பறப்பது உண்மைதான். ஆனால் அவை என் கண்ணியில் சிக்கியவுடன் அவை எனக்கே சொந்தம்! அவற்றின் முடிவைத்தீர்மானிப்பது நானே! ஹ....ஹ...ஹ..” என அம்மனிதன் கூச்சலிட்டான்.

அந்த பெரியவர் அத்தெருமனிதனை அண்டிவந்து “ நீ இந்தப் பறவையை விற்பாயா? ” என்று கேட்டார்.

“ விற்பதா...? “ குழப்பமடைந்த அம்மனிதன் “ நீர் இதை வாங்கக் காரணம் என்ன? இது பாடாத, அழகில்லாத, பெறுமதியுமில்லாத, ஒன்றுக்கும் உதவாத ஒரு காட்டுப்பறவை ”

“ காரணத்தை உனக்கு சொல்லவேண்டிய அவசியமில்லை. விற்பாயானால் இதன் விலை என்ன? “ என்றார் பெரியவர்.

“ எந்த விலையும் கொடுக்க நீர் அயத்தமா? “ யோசித்தவாறு, “ரூ 100,000 கொடுக்க நீர் ஆயத்தமா..... ஹ... ஹ.. ஹ! ”

“ ம்... ம்.. சரி தருகிறேன் “ என்றார் அப்பெரியவர்.

“ ஒரு காட்டுப் பறவைக்கு ரூ100,000மா? “ என அவனும் அவனைச் சுற்றியிருந்தவர்களும் ஆச்சரியப்பட்டனர்.

அப்பெரியவர் அமைதியாக பணத்தை எண்ணி அத்தெரு மனிதனிடம் கொடுத்து, பறவையை எடுத்து, முத்தமிட்டு, சுதந்திரமாய் அதைப் பறக்கவிட்டு, தன்பாட்டில் நடந்து போய்விட்டார். இது எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

இது ஒரு கதை தானே என்று நீங்கள் நினைக்கக் கூடும். மூளையுள்ள எந்த மனிதனும் ஒரு காட்டுப் பறவைக்கு இப்பேர்ப்பட்ட விலையைக் கொடுக்கமாட்டான் என்று நினைக்கிறீர்களா?

ஆம் நீங்கள் நினைப்பது சரியே! ஆயினும் கண்ணுக்கு தென்படாத உலகிலே இது நிஜமாக நடந்தேறியது. தேவ சமூகத்தை அனுபவிப்பதற்காக, தேவ சாயலில் நாம் படைக்கப்பட்டோம். ஆகிலும், தேவனை மறுதலித்து, அழிவை நோக்கிச் செல்லத் தீர்மானித்து, தேவ சமுகத்து மகிழ்ச்சியைப் பார்க்கிலும், பாவ சந்தோஷத்தைத் தெரிந்துகொண்டோம். எமது மாம்சத்தைத் திருப்திப்படுத்த நாம் பொருளாசை, இச்சை, பொறாமை, தூஷணம், சண்டை, இலஞ்சம், கொலை போன்றவற்றை நடப்பித்தோம். ஒவ்வொரு பாவமும் நம்மை பிசாசின் வலையில் சிக்கவைக்கும் கண்ணி என்று அறியாதிருந்தோம். எமது நிலைமையை நாம பிசாசின் கைகளில் ஒரு விளையாட்டுப் பொருளாகிவிட்ட எம்மை அவன் தன் இஷ்டப்படி பாடுபடுத்தினான். தப்பிச்செல்ல வழிதேடியும் கிடைக்கவில்லை.



ஆகிலும், எமது கூக்குரல் இயேசுவின் செவிகளில் எட்டியது. பிசாசின் பிடியில் சிக்குண்டு படுகுழியில் இருந்த எம்மை நோக்கி இயேசு இறங்கிவந்தார்.

அவனை “என்ன செய்கிறாய்?” என்றார்.

“உமக்குத் தெரியவில்லையா?” என்று ஏளனமாகக் கேட்டான் பிசாசு “ எல்லா மனிதருக்கும் செய்வதையே செய்கிறேன். நான் அவனைப் பாடுபடுத்தி,

அவனது மகிழ்ச்சியை எடுத்துப் போட்டு, குடும்பத்தைச் சீர்குலைத்து, வீதிகளில் சண்டைபண்ண வைத்து, சூதாட்டம், குடி, விபச்சாரம் போன்றவற்றை செய்ய வைத்து, கோபப்பட, சண்டைபண்ண, கொலை, தற்கொலை செய்யவைத்து, அவமானப்படுத்தி, குற்ற மனசாட்சியினாலும், வேதனையினாலும் வாதிப்பேன். அவனது அழிவைப் பார்ப்பதில் எனக்குப் பேரானந்தம்!''

''சாத்தானே! அவன் தேவனால் படைக்கப்பட்டவன், அவனோடு உனக்கு என்ன வேலை?'' என்றார் இயேசு.

'' அது பழைய கதை. தேவன் அவனைப் படைத்திருந்தாலும், அவன் பண ஆசை, பொருளாசையுடையவனாகி நான் அவனுக்குக் கொடுத்த எல்லாவற்றையும் ஆசையோடு ஏற்றான். கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை போன்ற பாவத்தால் நான் அவனை சிறையாக்கினேன். இப்பொழுதோ அவன் எனக்கு சொந்தம். அவன் தன்னைத் தானே என்னிடம் விற்றுப்பேட்டான்'' என்றான் பிசாசு.

'' தேவனுக்காக அவனை மீட்க நீ எனக்கு விற்பாயா?''

'' நீர் ஏன் அவனை மீட்க விரும்புகிறீர்? அவனுடைய முரட்டாட்டம் உமக்குத் தெரியுமே? தேவனை மறுதலித்து, அவன்தானே என்னைத் தன் எஜமானாகத் தெரிந்துகொண்டான். சிருஷ்டிக்கப்பட்ட விதத்தில் அவன் இப்போது இல்லை. நான் அவனை ஒழுங்கற்றவனாய், வெறுமையுள்ளவனாய் மாற்றிவிட்டேன். ஆயினும் நீர் ஏன் அவனை மீட்க விரும்புகிறீர்?''

'' காரணத்தை உனக்கு சொல்ல வேண்டுவதில்லை. விற்றால் என்ன விலை சொல்வாய்?''

'' எந்த விலையும் கொடுக்க நீர் ஆயத்தமா?'' பிசாசு அதுதான் நல்ல தருணம் என ஒரு நிமிடம் நினைத்துவிட்டு, உற்சாகத்துடன் ''உமது இரத்தம்'' என்றான்.

இயேசு உற்றுப்பார்த்தார். அவர் கண்களில் எனக்கு தயவு கிடைத்தது. '' சரி தருகிறேன்'' என்றார்.

பாவம், பிசாசு, குற்றமனசாட்சி, நித்திய நரகம் என்பவற்றிலிருந்து என்னை மீட்க இயேசு மரிக்க நேரிட்டது.



“ இயேசுவே, என்னைப்போன்ற ஒன்றுக்கும் உதவாதவனுக்காக ஏன் மரித்தீர்? உம்முடைய இரத்தமாகிய இப்பெரும் கிரயத்தை ஏன் செலுத்தினீர்?” என்று பலமுறை அவரிடம் கேட்டேன்.

“ மகனே நான் உன்னை நேசிக்கிறேன். நீ நரகம் செல்வதை என்னால் பார்க்க முடியாது. நீ என்னோடே இருக்கும்படிக்கே உன்னை சிருஷ்டித்தேன். உன்னை என் வீடாக்கிக்கொள்வாயா? இப்பூமியிலும் என்னோடு கூட நீ மகிழவேண்டும் என்றே நான் விரும்புகிறேன். உன் ஓட்டத்தை இப்பூமியில் முடித்ததும், என்னோடே கூட நீ இருக்கும்படி நித்திய பரலோகத்திற்கு உன்னை அழைத்துச் செல்வேன்” என்றார்.

சிநேகிதனே! உனக்காக இயேசு கல்வாரியில் அவரது இரத்தத்தை விலைக் கிரயமாகச் செலுத்தினார். இனிமேல் நீ பிசாசிற்கு அடிமையாக இருக்க வேண்டியதில்லை. இயேசுவை உன்னில் வாழ அழைப்பாயா? பாவ வெட்கத்திலிருந்து அவர் உன்னை மீட்டு மகிழ்ச்சியால் நிரப்புவார். இவ்வுலகிலும், மறுவுலகிலும் தேவனோடு கூட நீ ஐக்கியமாக வாழலாம்.



இப்போதே இயேசுவே என் வாழ்க்கைக்குள் வாரும் என்று அழைப்பாயா?

ஜெபம்: இயேசுவே! சிலுவையில் எனக்காக மரித்ததற்காக நன்றி. என் பாவத்தை மன்னித்து சுத்திகரியும். பாவத்திலிருந்தும் பிசாசின் பிடியிலிருந்தும் என்னை மீட்டுக்கொள்ளும். என்னை உம் வீடாய்மாற்றும். இவ்வுலகிலும் மறுவுலகிலும் நீரே என் கர்த்தர்.

ஆமேன்!

Written by : Bro Saju John Matthew

மேலதிக விபரங்களுக்கான எங்கள் முகவரி :

El - Bethel Power Ministries

No. 71 B, Cemetery Road,
Kerawalapitiya,
Hendala, Wattala.

No. 53, Rosita Housing Scheme,
Kotagala.

Wevaltalawa,
Yatiyantota.

V C Road, Vantharumoolai,
Batticaloa.

Selvapuram, Mullaitivu.

email : ebpmslmedia@gmail.com